1989 மே 2] [திரு. மு. கண்ணப்பன்]

பட்டு, அந்த முடிவினுடைய அடிப்படையிலே நீண்டகாலமாகவே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அரசியல் கட்சிகள், இன்னும் பல்வேறு பொதுமக்களுடைய நலம் காக்கின்ற நிறுவனங்கள் மூலம் வந்த புகாரினுடைய அடிப்படையிலேதான் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு எல்லாம் முறையாக நோட்டீஸ்கள் கொடுக்கப்பட்டு, டாம் டாம் மூலமாக முன்னாலே அறிவிக்கப்பட்டு, அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. அதோடு, சேரன்மாதேவியினுடைய துணை ஆட்சித் தலைவரும், வருவாய்த் துறை அதிகாரிகளும், காவல் துறையினரும் உடன் இருந்து, அங்கேயிருக்கக் கூடிய நிலங்களை, எந்தெந்த அளவு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு உள்ளது என்பதை சர்வே செய்ததற்குப் பின்னாலேதான் ஆக்கிரமிப்பு செய்து இருக்கின்ற பகுதிகளை மட்டுமே அகற்றியிருக்கிறார்களே தவிர, பட்டா நிலங்களிலே போய் அத்தகைய கெடுபிடிகள் ஏதும் செய்யவில்லை.

அதோடு இதிலே நாங்குநேரி, இடையன்குடி, திசையன்விளை, உடன்குடி ஆகிய எல்லா சாலைகளிலும் இருக்கிற ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தியிருப்பதாகத்தான் தகவல் தந்திருக்கிறார்கள். அப்படி ஏதாவது ஒரு பாதையில், குறிப்பிட்டுள்ளபடி ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை என்று சொன்னால், நிச்சயமாக அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

6. சட்டமுன்வடிவு.

ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகின்றேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.